-

நாகப்பட்டினம் நகராட்சி

**2020-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் -30 -ம் நாள் புதன் கிழமை காலை 11..00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 30.09.2020 | பொருள் எண்.1<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 நாகூர் வண்ணான் குளத்தினை தூர்வாரி மழைநீர் கட்டமைப்புடன் மேம்பாடு செய்திடும் பணி மேற்கொள்ள ரூ.170.00 இலட்சத்தற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு முழு மானியமாக நிதி வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு – 1 – மேற்படி குளத்தினை பொதுமக்கள் பெருமளவில் பயன்படுத்துவதை கருதியும் நிலத்தடி நீர் மட்டம் மற்றும் உவர்தன்மையினை மாற்றிட ஏதுவாகவும் மேம்பாடு செய்திட வேண்டிய அவசியம் கருதியும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1861/2019/இ1 | தீர்மானம் எண். 315<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண்.2<br>இந்நகராட்சியின் 2019-2020ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு – 1 – மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.341/2020/சி1 | தீர்மானம் எண். 316<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண்.3<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட காந்தி மார்க்கெட் கீழ்புறம் NFDB (NATIONAL FISHERS DEVELOPMENT BORD) திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கடைகளில் கடை எண்.6-க்கு மூன்றாண்டுகள் உரிமத்திற்கு 11-09-2020 அன்று நடைபெற்ற பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் உயர்ந்தபட்ட ஏல கேள்வித்தொகையாக ரூ.2900/-க்கு திரு.எஸ்.கட்டபொம்மன் என்பவர் உரிமம் கோரியுள்ளார். மேற்படி உயர்ந்தபட்ச ஏல கேள்வித் தொகையினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு – 1 – மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 4370/2017/அ4 | தீர்மானம் எண். 317<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் புதிய போருந்து நிலையத்தில் தென்புறம் அமைந்துள்ள கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.314 நாள்.28-08-2020 பொது ஏலம் கோருவதற்கு அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி இனத்திற்கு 11-09-2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகையாக ரூ.1,10,000/-க்கு திரு.குணசேகரன் த/பெ. ஆசைதம்பி என்பவர் கோரியுள்ளார். மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகையினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலககுறிப்பு – 1 – மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 – புதிய பேருந்து நிலையத்தில் பழைய கழிவறை இடிக்கப்பட்டு புதிய கழிவறை கட்டுமான பணிகள் நடந்து வருகிறது. இப்பணியானது 6 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்பதால் தென்புறம் அமைந்துள்ள கழிவறை உரிமத்தினை 6மாதங்களுக்கு மட்டும் உரிமம் வழங்க அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4370/2014/அ4 | தீர்மானம் எண். 318<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண்.5<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்ட பேரவையில் விதி 110ன் கீழ் மாவட்டம் தோரும் ஆவின் பாலகம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆவின் | தீர்மானம் எண். 319<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>பாலகம் அமைக்க இடம் வசதி ஏற்படுத்தி தர பொது மேலாளர் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் நக.எண்.5400/P&1 நாள்.09–09–2020–ல் கோரியுள்ளார். மேற்படி ஆவின் பாலகம் அமைப்பது தொடர்பாக கட்டிட ஆய்வரால் நேரய்வு செய்யப்பட்டதில் வார்டு எண்.6, பிளாக் எண்.16, நகரளவு எண்.968 மற்றும் 969–ல் அமையும் இடத்தில் நாகூர் மெயின் ரோட்டிற்கு மேற்கு புறம் நாகூர் பேருந்து நிலையத்தின்நுழைவு வாயில் பகுதி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படாத இடமாக இருப்பதால், மேற்படி இடத்தில் 15X15 க்கு அளவில் ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வழங்கலாம் என குறிப்பளித்துள்ளார். எனவே நகராட்சியின் வருவாயினை கருத்தில்கொண்டு நகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு ஆவின் பாலகத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/–ம் வீதம் வாடகை நிர்ணயம் செய்தும் மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் அமைத்துக்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td></td><td>2</td><td>நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு நகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண்.1953/2020/அ4</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.09.2020</td>
<td>பொருள் எண்.6<br>
நாகப்பட்டினம் நகராட்சியின் உள்ள அனைத்து கணிணி மற்றும் அதன் தொடர்புடைய பொருட்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி உதவி திட்ட அமைப்பாளர் தனது 02–09–2020ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே ஆண்டு பராமரிப்பு செய்ய வேண்டிய அனைத்து கணிணி வன்பொருள் ( Hard ware Computer, Printer, Switches, Router and Modam போன்ற தொடர்புடைய பொருட்களுக்கு ஆண்டு பராமரிப்பு (Annual Maintenance Charges) பணியினை மேற்கொள்ளவும் இதற்கு ஆகும். உத்தேச செலவினம் ரூ.2.20 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td></td><td>2</td><td>கணிணி பராமரிப்பின் அவசர அவசியத்தினை முன்னிட்டு நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தபுள்ளிகள் கோரிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கரிக்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண்.1785/2020/இ1</td>
<td>தீர்மானம் எண். 320<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.09.2020</td>
<td>பொருள் எண்.7<br>
நாகப்பட்டினம் நகராட்சி பொதுசுகாதாரப்பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் துாய்மை பணிகளுக்கு போதுமான பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25865/பி3/2013 நாள்.20–07–2013 ன் படி அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (வழங்கல்) துறை நாள்.30–04–1997ல் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் 223 எண்ணம் வெளியாட்களை கொண்டு (Out Sourcing) துாய்மை பணியாளர்கள் மூலம் துாய்மை பணி மேற்கொள்ளப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தற்பொழுது துாய்மை பிரிவு 2 மற்றும் 3 களில் 70 தினக்கூலி துாய்மை பணியாளர்களும், துாய்மை பிரிவு 1 மற்றும் 4களில் 75 தினக்கூலி துாய்மை பணியாளர்களையும் கொண்டு ( Out Sourcing ) பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 70 தினக்கூலி பணியாளர்களின் ஒப்பந்த காலம் 30–09–2020ல் முடிவடைவதால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.6586/2020/ஈ1 நாள்.20–08–2020 ன் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விகிதத்தின்படி நாள் ஒன்றிற்கு ஒரு பணியாளர்களுக்கு ரூ.420/–வீதம் ஊதியம் வழங்கிடவும் விளம்பர கட்டணம் மற்றும் இதர செலவினத்திற்கு உத்தேச செலவின தொகை ரூ.121.00 இலட்சத்தை ( G.S.T.18% நீங்கலாக) நகராட்சி பொது நிதியில் பணிகள் மேற்கொள்வதற்கு பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலகர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மேற்கண்ட பணிக்கு உத்தேச செலவின தொகை ரூ.121.00/– இலட்சமும் ( G.S.T.18% நீங்கலாக) பொது நிதியில் பணிகள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td></td><td>2</td><td>பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி</td></tr>
</table></td>
<td>தீர்மானம் எண். 321<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.1674/2020/எச்1 | |

30.09.2020

பொருள் எண்.8

நாகப்பட்டினம் நகராட்சியின் பொதுசுகாதாரப்பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் துப்புரவு பணிகளுக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.25865/பி3/2013 நாள்.20–07–2013 ன் படி அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (வழங்கல்) துறை நாள்.30–04–1997இல் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் 70 எண்ணம் வெளியாட்களை கொண்டு (Out Sourcing ) துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் செயல்முறை ஆணை ந.க.எண்.6586/2020/ஈ1 நாள்.20–08–2020 இல் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தின்படி ஒரு தினக்கூலி பணியாளருக்கு ரூ.420/– வீதம் தினக்கூலி வழங்குவதற்கு பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று கடந்த 29–09–2020–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் வரப்பெற்ற விவரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விபரம் | மதிப்பீட் |
|---|---|---|---|
| 1 | M/S. ரேன்ஸ் இன்ஜினியரிங் ஒப்பந்தக்காரர் நாகப்பட்டினம் | பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் (OutSourcing) 70 எண்ணம் தினக்கூலி துப்புரவு பணியாளர்களை வழங்கும் பணி | ரூ.462/– நீங்கலாக |
| 2 | திரு.ஜே.ஜேசு ஒப்பந்தக்காரர் நாகப்பட்டினம். | | ரூ.475/– நீங்கலாக |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1இல் கண்டுள்ள M/S. ரேன்ஸ் இன்ஜினியரிங் நிறுவனத்தாரால் ஒரு தினக்கூலி பணியாளருக்கு ரூ.462/–மட்டும் (G.S.T. 18% நீங்கலாக) என கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை ஏற்க பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று விநியோகம் ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |
|---|---|---|

ந.க.எண்.1674/2020/எச்1

தீர்மானம் எண். 322
அ.கு
அனுமதிக்கப்பட்டது

30.09.2020

பொருள் எண்.9

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட குத்தகை இனங்களை 2020–2021–ம் ஆண்டிற்கு ஒப்படைக்கு நாள் முதல் ஓராண்டிற்கான குத்தகை உரிமத்திற்கு 11–09–2020 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச ஏலக் கேள்வித் தொகை உயர்ந்த கேள்வி கேட்ட நபர் மற்றும் மூன்றாண்டுகளின் சராசரி தொகை போன்ற விவரங்களுடன் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதி வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>விபரம்</th><th colspan="3">குறிப்பு</th></tr>
<tr><td>1</td><td>2020–2021–ம் ஆண்டின் குத்தகை விபரம்</td><td colspan="3">நாகப்பட்டினம் பழைய பேருந்துநிலையத்தில் அமைந்துள்ள மறைமலை அடிகளார் வளாக மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">11–09–2020–ந் தேதிய பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச உரிமத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி</td><td>வ.எண்</td><td>பெயர் மற்றும் முகவரி</td><td>தொகை ரூ</td></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.பெரியபாண்டி<br>த/பெ.மாயத்தேவர்<br>மருந்துகொத்தளரோடு,<br>நாகப்பட்டினம்.</td><td>3,55,000</td></tr>
<tr><td>3</td><td>2019–2020–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை</td><td colspan="3">ரூ. 3,37,365</td></tr>
<tr><td>4</td><td>2020–2021–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை</td><td colspan="3">ரூ. 3,55,000</td></tr>
<tr><td>5</td><td>கடந்த மூன்றாண்டு சராசரி</td><td colspan="3">ரூ. 3,21,555</td></tr>
<tr><td rowspan="3">6</td><td rowspan="3">குறிப்பு</td><td>அ</td><td colspan="2">கடந்த ஆண்டின் உரிமைத்தொகையை விட கூடுதலாக உள்ளது</td></tr>
<tr><td>ஆ</td><td colspan="2">மூன்றாண்டுகள் சராசரிதொகை விட கூடுதலாக உள்ளது</td></tr>
<tr><td>இ</td><td colspan="2">மேற்கண்ட குத்தகை இனத்தின் மூன்றாண்டுகள் உரிமக்காலம் 30–04–2020–வுடன் முடிவடைந்தது. கோவிட் –19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கும் விதமாக 24–03–2020 முதல் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் 144–ன் கீழ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு 06–09–2020 வரை ஊரடங்கு அமலில் இருந்த காரணத்தால் மேற்படி குத்தகை இனம் செயல்படாமல் இருந்தது. ஊரடங்கு தளர்வுகள் வழங்கியதால் 11–09–2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு.எம்.பெரியபாண்டி என்பவர் ரூ.3,55,000/–க்கு கோரியுள்ள உரிமத்தொகை கடந்த ஆண்டின் உரிமைத்தொகையைவிட கூடுதலாகவும், மூன்றாண்டுகள் சராசரி தொகையைவிட கூடுதலாக இருப்பதால் உயர்ந்தபட்ட ஏலக்கேள்வி தொகை ரூ.3,55,000/–ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
</table>

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண். 4370/2017/அ4

தீர்மானம் எண். 323

அ.கு

அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 30.09.2020 | பொருள் எண்.10<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட குத்தகை இனங்களை 2020–2021–ம் ஆண்டிற்கு ஒப்படைக்கு நாள் முதல் ஓராண்டிற்கான குத்தகை உரிமத்திற்கு 11–09–2020 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச ஏலக் கேள்வித்தொகை உயர்ந்த கேள்வி கேட்ட நபர் மற்றும் மூன்றாண்டுகளின் சராசரி தொகை போன்ற விவரங்களுடன் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதி வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 324<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | விபரம் | குறிப்பு | | |
|---|---|---|---|---|
| 1 | 2020–2021–ம் ஆண்டின் குத்தகை விபரம் | நாகப்பட்டினம் ஆடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | | |
| 2 | 11–09–2020–ந் தேதிய பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச உரிமத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ |
| | | 1 | திரு.எஸ். பாலசுப்பிரமணியன் த/பெ.சோலையழகு 56/64, அரியபத்திரபிள்ளை தெரு, நாகப்பட்டினம் | 1,12,000 |
| 3 | 2019–2020–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 98,070 | | |
| 4 | 2020–2021–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 1,12,000 | | |
| 5 | கடந்த மூன்றாண்டு சராசரி | ரூ. 1,25,180 | | |
| 6 | குறிப்பு | அ | கடந்த ஆண்டின் உரிமைத்தொகையை விட கூடுதலாக உள்ளது | |
| | | ஆ | மூன்றாண்டுகள் சராசரிதொகை விட குறைவாக உள்ளது. | |
| | | இ | மேற்கண்ட குத்தகை இனத்தில் கடந்த இரண்டாண்டுகளாக உரிமம் கோர எவரும் முன்வராதகாரணத்தால் துறைசார்ந்த வசூல் பணி பார்க்கப்பட்டது. 11–09–2020–ம் தேதிய பொது ஏலத்தில் திரு.எஸ். பாலசுப்பிரமணியன் என்பவர் கோரியுள்ள உரிமைத்தொகை ரூ.1,12,000/–ம் கடந்த இரண்டாண்டுகள் வசூல் செய்த தொகையைவிட கூடுதலாக உள்ளது. மேற்படி குத்தகை இனத்தில் தொடர்ந்து துறைசார்ந்த வசூல் பணி மேற்கொண்டால் பணியாளர்கள் ஊதியம், மின்சார கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் வசூல் தொகையைவிட கூடுதலாக செலவிடப்படுவதால், கடந்த ஆண்டின் உரிமைத்தொகையைவிட கூடுதலாக இருப்பதால் உயர்ந்தபட்ட ஏலக்கேள்வி தொகை ரூ.1,12,000/–ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண். 4370/2017/அ4

| | | |
|---|---|---|
| 30.09.2020 | பொருள் எண்.11<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட குத்தகை இனங்களை 2020–2021–ம் ஆண்டிற்கு ஒப்படைக்கு நாள் முதல் ஓராண்டிற்கான குத்தகை உரிமத்திற்கு 11–09–2020 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச ஏலக் கேள்வித் தொகை உயர்ந்த கேள்வி கேட்ட நபர் மற்றும் மூன்றாண்டுகளின் சராசரி தொகை போன்ற விவரங்களுடன் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதி வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 325<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | விபரம் | குறிப்பு |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | 2020–2021–ம் ஆண்டின் குத்தகை விபரம் | நாகப்பட்டினம் ஆசாத் மார்க்கெட் கீழ்புறம் காந்திமார்க்கெட்டில் புதிதாக கட்டியுள்ள மீன் மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | |
| 2 | 11–09–2020–ந் தேதிய பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச உரிமத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ |
| | | 1 | திரு.எஸ்.சாம்பால் த/பெ.ஸ்டிபன்பால் 3,சாந்தாபிள்ளைசந்து, நாகப்பட்டினம். | 45,600/– |
| 3 | 2019–2020–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 42,900 | |
| 4 | 2020–2021–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 45,600 | |
| 5 | கடந்த மூன்றாண்டு சராசரி | ரூ. 38,200 | |
| 6 | குறிப்பு | அ | கடந்த ஆண்டின் உரிமைத்தொகையை விட கூடுதலாக உள்ளது |
| | | ஆ | மூன்றாண்டுகள் சராசரிதொகை விட கூடுதலாக உள்ளது |
| | | இ | மேற்கண்ட குத்தகை இனத்தில் கடந்த மூன்றாண்டுகளாக உரிமம் கோர எவரும் முன்வராதகாரணத்தால் துறைசார்ந்த வசூல் பணி பார்க்கப்பட்டது. 11–09–2020–ம் தேதிய பொது ஏலத்தில் திரு.எஸ்.சாம்பால் என்பவர் கோரியுள்ள உரிமைத்தொகை ரூ.45,600/–ம் கடந்த மூன்றாண்டுகள் வசூல் செய்த தொகையைவிட கூடுதலாக உள்ளது. மேற்படி குத்தகை இனத்தில் தொடர்ந்து துறைசார்ந்த வசூல் பணி மேற்கொண்டால் பணியாளர்கள் ஊதியம், மின்சார கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் வசூல் தொகையைவிட கூடுதலாக செலவிடப்படுவதால், கடந்த ஆண்டின் உரிமைத்தொகையைவிடவும் மூன்றாண்டு சாரா்ி தொகைகைவிட. கூடுதலாக இருப்பதால் உயர்ந்தபட்ட ஏலக்கேள்வி தொகை ரூ.45,600/–ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| அலுவலகுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 4370/2017/அ4

---

30.09.2020

பொருள் எண்.12

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட குத்தகை இனங்களை 2020–ம் ஆண்டிற்கு ஒப்படைக்கு நாள் முதல் ஓராண்டிற்கான குத்தகை உரிமத்திற்கு 11–09–2020 நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச கேள்வித் தொகை உயர்ந்த கேள்வி கேட்ட நபர் மற்றும் மூன்றாண்டுகளின் சராசரி தொகை ற விவரங்களுடன் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதி வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | குறிப்பு | | |
|---|---|---|---|---|
| 1 | 2020–2021–ம் ஆண்டின் குத்தகை விபரம் | நாகப்பட்டினம் அக்கரைகுளம் சந்திப்பு பகுதி அடிக்கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | | |
| 2 | 11–09–2020–ந் தேதிய பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச உரிமத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ |
| | | 1 | திருமதி. முருகேஸ்வரி க/பெ. முனிஸ்வரன் 31, அண்ணா நகர் , வடக்க தெரு நாகப்பட்டினம். | 38,200 |

தீர்மானம் எண்.326
அ.கு
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 3 | 2019–2020–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 36,120 |
| 4 | 2020–2021–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ.38,200 |
| 5 | கடந்த மூன்றாண்டு சராசரி | ரூ. 33,780 |
| 6 | குறிப்பு | அ கடந்த ஆண்டின் உரிமைத்தொகையை விட கூடுதலாக உள்ளது<br>ஆ மூன்றாண்டுகள் சராசரிதொகை விட கூடுதலாக உள்ளது<br>இ மேற்கண்ட குத்தகை இனத்தின் இரண்டாண்டுகள் உரிமக்காலம்31–03–2020–வுடன் முடிவடைந்தது. கோவிட்–19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கும் விதமாக 24–03–2020 முதல் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் 144–ன் கீழ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு 06–09–2020 வரை ஊரடங்கு அமலில் இருந்த காரணத்தால் மேற்படி குத்தகை இனம் செயல்படாமல் இருந்தது. ஊரடங்கு தளர்வுகள் வழங்கியதால் 11–09–2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திருமதி.மு.முருகேஸ்வரி என்பவர் ரூ.38,200/–க்கு கோரியுள்ள உரிமத்தொகை கடந்த ஆண்டின் உரிமைத்தொகையைவிட கூடுதலாகவும், மூன்றாண்டுகள் சராசரி தொகையைவிட கூடுதலாக இருப்பதால் உயர்ந்தபட்ட ஏலக்கேள்வி தொகை ரூ.38,200/–ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 4370/2017/அ4

30.09.2020

பொருள் எண்.13

தீர்மானம் எண். 327
அ.கு
அனுமதிக்கப்பட்டது

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட குத்தகை இனங்களை 2020– ஆண்டிற்கு ஒப்படைக்கு நாள் முதல் ஓராண்டிற்கான குத்தகை உரிமத்திற்கு 11–09–2020 அன்று மற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச ஏலக் த் தொகை உயர்ந்த கேள்வி கேட்ட நபர் மற்றும் மூன்றாண்டுகளின் சராசரி தொகை போன்ற களுடன் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதி வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | 2020–2021–ம் ஆண்டின் குத்தகை விபரம் | நாகப்பட்டினம் பாரதி நாளங்காடி காய்கறி கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |
| 2 | 11–09–2020–ந் தேதிய பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச உரிமத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | வ.எண்: 1 ; பெயர் மற்றும் முகவரி: திரு.ஆர்.ரோஸ்மாரி த/பெ. ரோஸ்தேவர் பப்ளீக் ஆபீஸ் ரோடு, வெளிப்பாளையம் நாகப்பட்டினம் ; தொகை ரூ: 1,07,000 |
| 3 | 2019–2020–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 94,500 |
| 4 | 2020–2021–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ.1,07,000 |
| 5 | கடந்த மூன்றாண்டு சராசரி | ரூ. 91,040 |
| 6 | குறிப்பு | அ கடந்த ஆண்டின் உரிமைத்தொகையை விட கூடுதலாக உள்ளது<br>ஆ மூன்றாண்டுகள் சராசரிதொகை விட கூடுதலாக உள்ளது<br>இ மேற்கண்ட குத்தகை இனத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இரண்டாண்டுகள் உரிமக்காலம் 31–05–2020–வுடன் முடிவடைந்தது. கோவிட் –19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கும் விதமாக 24–03–2020 முதல் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் 144–ன் கீழ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு 06–09–2020 வரை ஊரடங்கு அமலில் இருந்த காரணத்தால் மேற்படி குத்தகை இனம் செயல்படாமல் இருந்தது. ஊரடங்கு தளர்வுகள் வழங்கியதால் 11–09–2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு.ஆர்.ரோஸ்மாரி என்பவர் ரூ.1,07,000/–க்கு கோரியுள்ள உரிமத்தொகை கடந்த ஆண்டின் உரிமைத்தொகையைவிட கூடுதலாகவும், மூன்றாண்டுகள் சராசரி தொகையைவிட கூடுதலாக இருப்பதால் உயர்ந்தபட்ட ஏலக்கேள்வி தொகை ரூ.1,07,000/–ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 4370/2017/அ4

30.09.2020

பொருள் எண்.14

கப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட குத்தகை இனங்களை 2020–2021–ம் ற்கு ஒப்படைக்கு நாள் முதல் ஓராண்டிற்கான குத்தகை உரிமத்திற்கு 11–09–2020 அன்று பற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச ஏலக் த் தொகை உயர்ந்த கேள்வி கேட்ட நபர் மற்றும் மூன்றாண்டுகளின் சராசரி தொகை போன்ற களுடன் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதி வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | குறிப்பு | | |
|---|---|---|---|---|
| 1 | 2020–2021–ம் ஆண்டின் குத்தகை விபரம் | நாகப்பட்டினம் எண்ணெய் கடை சந்தில் அமைந்துள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | | |
| 2 | 11–09–2020–ந் தேதிய பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச உரிமத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ |
| | | 1 | திரு.ஜெ.சுதாகர்<br>த/பெ. ஜெயராஜ்<br>15எப்,கே.பி.எஸ்.காலனி,<br>நாகப்பட்டினம். | 2,42,000 |
| 3 | 2019–2020–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 2,21,025 | | |
| 4 | 2020–2021–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 2,42,000 | | |
| 5 | கடந்த மூன்றாண்டு சராசரி | ரூ. 2,24,045 | | |
| 6 | குறிப்பு | அ | கடந்த ஆண்டின் உரிமைத்தொகையை விட கூடுதலாக உள்ளது | |
| | | ஆ | மூன்றாண்டுகள் சராசரிதொகை விட கூடுதலாக உள்ளது | |
| | | இ | மேற்கண்ட குத்தகை இனத்தின் இரண்டாண்டுகள் உரிமக்காலம் 31–03–2020–வுடன் முடிவடைந்தது. கோவிட் –19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கும் விதமாக 24–03–2020 முதல் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் 144–ன் கீழ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு 06–09–2020 வரை ஊரடங்கு அமலில் இருந்த காரணத்தால் மேற்படி குத்தகை இனம் செயல்படாமல் இருந்தது. ஊரடங்கு தளர்வுகள் வழங்கியதால் 11–09–2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு.ஜெ.சுதாகர் | |

தீர்மானம் எண். 328

அ.கு

அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | | என்பவர் ரூ.2,42,000/–க்கு கோரியுள்ள உரிமத்தொகை கடந்த ஆண்டின் உரிமைத்தொகையைவிட கூடுதலாகவும், மூன்றாண்டுகள் சராசரி தொகையைவிட கூடுதலாக இருப்பதால் உயர்ந்தபட்ட ஏலக்கேள்வி தொகை ரூ.2,42,000/–ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண். 4370/2017/அ4

30.09.2020

பொருள் எண்.15

தீர்மானம் எண். 329
அ.கு
அனுமதிக்கப்பட்டது

ாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட குத்தகை இனங்களை 2020–2021–ம் டிற்கு ஒப்படைக்கு நாள் முதல் ஓராண்டிற்கான குத்தகை உரிமத்திற்கு 11–09–2020 அன்று பெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச ஏலக் வித் தொகை உயர்ந்த கேள்வி கேட்ட நபர் மற்றும் மூன்றாண்டுகளின் சராசரி தொகை போன்ற ங்களுடன் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதி வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | குறிப்பு | | |
|---|---|---|---|---|
| 1 | 2020–2021–ம் ஆண்டின் குத்தகை விபரம் | நாகூர் தர்கா பின்புறம் அமைந்துள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | | |
| 2 | 11–09–2020–ந் தேதிய பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச உரிமத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ |
| | | 1 | திரு. ப.அறிவழகன் த/பெ.பன்னீர் முனிசிபல்பேட்டைரோடு, வெளிப்பாளையம் , நாகப்பட்டினம் | 1,22,500 |
| 3 | 2019–2020–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 1,10,250 | | |
| 4 | 2020–2021–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 1,22,500 | | |
| 5 | கடந்த மூன்றாண்டு சராசரி | ரூ. 1,05,100 | | |
| 6 | குறிப்பு | அ | கடந்த ஆண்டின் உரிமைத்தொகையை விட கூடுதலாக உள்ளது | |
| | | ஆ | மூன்றாண்டுகள் சராசரிதொகை விட கூடுதலாக உள்ளது | |
| | | இ | மேற்கண்ட குத்தகை இனத்தின் மூன்றாண்டுகள் உரிமக்காலம் 31–03–2020–வுடன் முடிவடைந்தது. கோவிட் –19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கும் விதமாக 24–03–2020 முதல் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் 144–ன் கீழ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு 06–09–2020 வரை ஊரடங்கு அமலில் இருந்த காரணத்தால் மேற்படி குத்தகை இனம் செயல்படாமல் இருந்தது. ஊரடங்கு தளர்வுகள் வழங்கியதால் 11–09–2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு.ப.அறிவழகன் என்பவர் ரூ.1,22,500/–க்கு கோரியுள்ள உரிமத்தொகை கடந்த ஆண்டின் உரிமைத்தொகையைவிட கூடுதலாகவும், மூன்றாண்டுகள் சராசரி தொகையைவிட கூடுதலாக இருப்பதால் உயர்ந்தபட்ட ஏலக்கேள்வி தொகை ரூ.1,22,500/–ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண். 4370/2017/ அ4

| | | |
|---|---|---|
| 30.09.2020 | பொருள் எண்.16 | தீர்மானம் எண். 330<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட குத்தகை இனங்களை 2020–
ம் ஆண்டிற்கு ஒப்படைக்கு நாள் முதல் ஓராண்டிற்கான குத்தகை உரிமத்திற்கு 11–09–2020
ு நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச
கேள்வித் தொகை உயர்ந்த கேள்வி கேட்ட நபர் மற்றும் மூன்றாண்டுகளின் சராசரி தொகை
ற விவரங்களுடன் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதி வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | 2020–2021–ம் ஆண்டின் குத்தகை விபரம் | நாகூர் புதிய பேருந்து நிலையத்தில் கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிம |
| 2 | 11–09–2020–ந் தேதிய பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச உரிமத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | வ.எண்: 1 — பெயர் மற்றும் முகவரி: திரு.த..சரவணன் த/பெ.தங்கராஜ்<br>அண்ணாபடிப்பகம் சந்து,<br>வெளிப்பாளையம், நாகப்பட்டினம். |
| 3 | 2019–2020–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ. 97,650 |
| 4 | 2020–2021–ம் ஆண்டின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வித்தொகை | ரூ.1,07,500 |
| 5 | கடந்த மூன்றாண்டு சராசரி | ரூ. 92,425 |
| 6 | குறிப்பு | அ — கடந்த ஆண்டின் உரிமைத்தொகை உள்ளது<br>ஆ — மூன்றாண்டுகள் சராசரிதொகை விட கூ<br>இ — மேற்கண்ட குத்தகை இனத்தின் இரண்ட 31–05–2020–வுடன் முடிவடைந்தது. கே வைரஸ் நோய் தொற்றை தடுக்கும் விதம குற்றவியல் விசாரணை நடைமுறை சட்ட பிறப்பிக்கப்பட்டு 06–09–2020 வரை ஊ காரணத்தால் மேற்படி குத்தகை இனம் ெ ஊரடங்கு தளர்வுகள் வழங்கியதால் 11–( ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிய என்பவர் ரூ.1,07,500/–க்கு கோரியுள்ள ஆண்டின் உரிமைத்தொகையைவி மூன்றாண்டுகள் சராசரி தொகையைவிட உயர்ந்தபட்ட ஏலக்கேள்வி தொ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு ( |

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண். 4370/2017/ அ4

| | | |
|---|---|---|
| 30.09.2020 | பொருள் எண்.17 | தீர்மானம் எண். 331<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

இயற்கை பேரிடர் நிகழ்வான கோவிட் –19 காரணமாக பொது ஊராடங்கு காலமான 01–04–2020 முதல் 31–05–2020 வரை உள்ள காலத்திற்கு நகராட்சிக்கு சொந்தமான செயல்படாத குத்தகை இனங்களுக்கு வாடகை செலுத்துவதிலிருந்து விளக்கு அளித்து ஆணையிடப்பட்டுள்ளது அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02–09–2020ல் உத்தரவிட்டுள்ள அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |
|---|---|---|

ந.க.எண்.2013/2020/அ4

| | | |
|---|---|---|
| 30.09.2020 | பொருள் எண்.18 | தீர்மானம் எண். 332<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.9025/2020/இ3 நாள்.16–07–2020ல் நாகப்பட்டினம் நகராட்சிக்கு 5.135 கி.மீட்டர் நீளத்திற்கு தார் சாலைகள் அமைத்திட ரூ.200.00 இலட்சத்திற்கும் சிப்பம் எண்.1ற்கும் 4.820 கி.மீட்டர் நீளத்திற்கு தார் சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகள் அமைத்திட ரூ.200.00 இலட்சத்திற்கும் ஆக கூடுதல் ரூ.400.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு 2020–2021ம் ஆண்டிற்குரிய பொதுப்பணித்துறை 01–07–2020 தரப்படுத்தப்பட்டுள்ள விலைப்பட்டியலின் படி தொழில்நுட்ப அனுமதிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதால் சிப்பம் எண்.1ற்கு 5.135 கி. மீட்டர் நிளத்திற்கு ரூ.210.00 இலட்சம் மற்றும் சிப்பம் எண்.2ற்கு 4.820 கி.மீட்டர் நீளத்திற்கு ரூ.205.00 இலட்சம் வருகிறது.

| | | |
|---|---|---|
| | ஆகவே மேற்படி பணிகளை மேற்கொள்ள கூடுதல் செலவினத்தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 கூடுதல் செலவினம் ரூ.15.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.1002/2020/இ1 | |
| 30.09.2020 | பொருள் எண்.19<br>நாகப்பட்டினம் நகராட்சியின் பராமரிப்பிலுள்ள கோட்டைவாசல் கழிவு நீரேற்று நிலையம் செல்லூார் சாலையில் உள்ள கழிவு நீரேற்று நிலையம் நாகூர் வண்டிப்பேட்டை நீர்தேக்கத்தொட்டி நகராட்சி அலுவலகம் மற்றும் ஓடாச்சேரி நீர்தேக்கம் ஆகிய இடங்களில் உள்ள ஜெனரேட்டர்களை சர்வீஸ் செய்து பராமரிப்பு பணி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டதற்கும் அதற்கான செலவினம் ரூ.1,50,800/– மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>ந.க.எண்.1702/2017/இ1 | தீர்மானம் எண். 333<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண்.20<br>எதிர்வரும் வடக்கிழக்கு பருவமழையை முன்னிட்டு நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் பொது சுகாதாரப்பணியின் கீழ் டெங்கு நோய் பரப்பும் ஏடிஸ் டெங்கு கொசு புழுக்கள் உருவாக காரணமாக உள்ள உரல்கள், டயர்கள், தேங்காய்மட்டைகள், உடைந்த மண்பாண்டங்கள் மற்றும்முட்டைதோள் போன்றவைகளில் தேங்கி நிற்கும் கழிவு நீர் உள்ளதை கண்டறிந்து மருந்துகள் தெளித்தல் , புகை மருந்து அடித்தல், டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடத்தில் ஏற்படுத்துதல் போன்ற சிறப்பு பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.95.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.163 நாள்.29–11–2019ல் அனுமதி வழங்கியதன் பேரில், கடந்த நவம்பர் 2019 முதல் ஆகஸ்ட் 2020 வரை ரூ.33,48,930/– க்கு பணிகள் நாளது தேதிவரை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.6586/2020/ஈ நாள்.20–08–2020 ன்ஆணையின் படி (01–04–2020 முதல் 31–03–2021 வரை) ஒரு தினக்கூலி பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.420/– வீதம் தினக்கூலி செப்டம்பர் மாதம் முதல் உயர்த்தி வழங்கிடவும் மேலும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளுக்கு தேவையான படிவங்கள் Fogging இயந்திரத்திற்கு தேவையான எரிபொருள் ஆகிய செலவினங்களுக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.65.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதிபெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.1100/2020/எச்1 | தீர்மானம் எண். 334<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண்.21<br>நாகப்பட்டினம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் உள்ள வாகனங்கள் இயக்குவதற்கு போதுமான நிரந்தர ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தால் தற்காலிகமாக முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் வெளியாட்களை கொண்டு (Outsourcing ) மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6586/2020/ஈ1 நாள்.20–08–2020ல் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தின் படி நாள் ஒன்றுக்கு ஒரு ஓட்டுநருக்கு ரூ.500/–வீதம் தினக்கூலி அடிப்படையில் 3 ஓட்டுநர்கள் பணியமர்த்திக்கொள்வதற்கும் மேலும் விளம்பர கட்டணம் மற்றும் இதர செலவினங்களையும் சேர்த்து கூடுதல் உத்தேச செலவின தொகை ரூ.6.00/– நகராட்சி பொது நிதியில் மேற்கொள்வதற்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மேற்கண்ட பணிக்கு உத்தேச செலவின தொகை ரூ.6.00/–இலட்சமும் பொது நிதியில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்திதன் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் | தீர்மானம் எண். 335<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1827/2020/எச்1

30.09.2020

பொருள் எண்.22

நாகப்பட்டினம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் உள்ள வாகனங்கள் இயக்குவதற்கு போதுமான நிரந்தர ஒட்டுநர்கள் இல்லாத காரணத்தால் தற்காலிகமாக முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் (Fully Contract Basis) வெளியாட்களை கொண்டு மாவட்ட ஆட்சித்லைவர் செயல்முறை ஆணை ந,க.எண்.6586/2020/ஈ1 நாள்.20–08–2020 இல் நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகிதத்தின்படி நாள் ஒன்றுக்கு ஒரு தினக்கூலி ஒட்டுநருக்கு ரூ.500/–வீதம் தினக்கூலி அடிப்படையில் 3 ஒட்டுநர்கள் பணியமர்த்திக்கொள்வதற்கு பொதுசுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நேக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று கடந்த 29–09–2020 ஆம் தேதி ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்ற விவரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | மதிப்பீட்டு விலை விவரம் |
|---|---|---|---|
| 1 | M/S. ரேன்ஸ் இன்ஜினியரிங் ஒப்பந்தக்காரர் நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் உள்ள வாகனங்கள் இயக்குவதற்கு தினக்கூலி ஒட்டுநர்கள் (Outsourcing) 3 எண்ணம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் (Fully Contract Basis) பணியாளர்களை வழங்குதல் | ரூ.500/– (G.S.T.-18$% நீங்கலாக) |
| 2 | திரு.ஜே.ஜேசு ஒப்பந்தக்காரர் நாகப்பட்டினம் | | ரூ.525/– ( G.S.T.-18$% நீங்கலாக) |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1இல் கண்டுள்ள M/S. ரேன்ஸ் இன்ஜினியரிங் நிறுவனத்தாரால் ஒரு தினக்கூலி ஒட்டுநருக்கு ரூ.500/– மட்டும் (G.S.T.-18$% நீங்கலாக) என கொடுக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தை ஏற்க பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று விநியோகம் ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு | 1 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1827/2020/எச்1

தீர்மானம் எண். 336
அ.கு
அனுமதிக்கப்பட்டது

//உண்மை நகல்//

(ஒம்) பி,ஏகராஜ்
ஆணையர் மற்றும் தனிஅலுவலர்